# ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலையம்

## கட்டட புனர்நிர்மான

# திறப்புவிழாவின் சிறப்பு மலர்




"மெய்யறிவே மேனிலைச் செல்வம்"



**14.11.2023**

## ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலைய தோற்றமும் வளர்ச்சியும்

கந்தரோடை என்று அழைக்கப்படும் எமது கிராமமானது 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுத் தன்மையை தன்னகத்தே கொண்டுள்ளது. அதாவது கிறிஸ்துவுக்கு முன் 50 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றை உடையது என்று ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்படுள்ளது. பண்டைய தமிழன் வரலாறுகளை தன்னகத்தே தாங்கி நிற்பது மட்டுமில்லாமல் அருள்மிகு ஆலயங்கள் நிறையப் பெற்றதும் சூழவர குளங்கள் வயல்கள் மற்றும் இயற்கை வளங்கள் நிறைந்ததுமான அழகிய பசுமைக் கிராமமே எமது கந்தரோடைக் கிராமமாகும். யாழ்ப்பாணத்தின் ஒரேயொரு ஆறான வழுக்கையாறும் எமது ஊரை வளம்படுத்திச் செல்லுவதும் ஒரு வரப்பிரசாதமே.

விரல்விட்டு எண்ணமுடியாத அளவிற்கு கல்விமான்கள், எழுத் தாளர்கள், ஆசிரியர்கள், கவிஞர்கள், வைத்திய நிபுணர்கள், பொறியிய லாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் தோன்றிய கிராமம் இது. கல்வி மான்களை தன்னகத்தே தோற்றுவித்துக் கொண்டிருக்கும் நமது கிராமத்தில் புகழ்பூத்த பாடசாலைகளான தமிழ்க் கந்தையா வித்தியாசாலை, ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை, மற்றும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி என்பன அமைந்துள்ளன. இதில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி நூற்றியிருபத் தைந்து ஆண்டுகட்கு மேலாக ஓர் புகழ்பூத்த பாடசாலையாக தேசியப் பாடசாலையாக மிளிர்வது நமது கிராமத்திற்கு மேலும் பெருமை தேடித்தரும் விடயமாகும்.


இப்படியாக வரலாறும் சமூக வளர்ச்சியும் ஒருங்கே சேரப்பெற்ற இக் கிராமத்திலே அமையப்பெற்ற ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலையத்தின்

வரலாற்றையும் வளர்ச்சியினையும் நானறிந்த வரையில் பதிவு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இச் சனசமூக நிலையமானது 1952ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு சுமார் 70 வருடங்களுக்கு மேலாக கந்தரோடை சமூக செயற்பாட்டின் ஒரு அங்கமாக தொடர்ந்தும் விளங்கிவருவது ஒரு குறிப்பிடத்தக்க விடயமாகும். எங்கள் கந்தரோடைக் கிராமத்தில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட சனசமூக நிலையமும் இதுவே என்பதும் பெருமைக்குரிய விடயமாகும்.

ஆரம்ப காலத்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு அருகாமையில் காலம் சென்றவரான திரு. தில்லையம்பலம் என்பவரது வீட்டுக் காணியில் அப்போது வாழ்ந்திருக்கக்கூடிய பெரியோர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து கொட்டில் ஒன்றில் வாசிகசாலையை ஆரம்பித்தார்கள். 1950களில் புதினப் பத்திரிகைகள் எதுவும் யாழ்ப்பாணத்தில் அச்சிடப்படவில்லை. ஆனாலும் கந்தரோடை மக்களின் ஓய்வுநேரத்தில் ஒன்று கூடிக் கலந்துரையாடவும் கந்தரோடை மக்களின் செய்தி வாசிப்பு பழக்கத்தையும் நாட்டு நடப்பு தொடர்பான பொது அறிவையும் மேம்படுத்தும் நோக்கோடு கொழும்பிலிருந்து வீரகேசரி, தினகரன், டெயிலி நியூஸ் (Daily News) போன்ற பத்திரிகைகள் தருவிக்கப்பட்டு வாசிப்பதற்கு இலவசமாக வழங்கப்பட்டன. அக்காலத்தில் இவ்வாசிகசாலைக்கு முன்பாக ஒரு பெரியவளவு மாமரங்களால் சூழப்பட்டிருந்தது. இக்காணியில் தினமும் அப்போதைய கந்தரோடை வாழ் இளைஞர்கள் ஒன்று சேர்ந்து கரப்பந்தாட்டம் (Volleyball) அடிப்பது வழக்கம். இவர்கள் அப்போது பிரதேச மட்ட மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்குபற்றி பல வெற்றியும் பெற்றிருந்தார்கள். இன்று பாராளுமன்ற உறுப்பினராக விளங்கும் கௌரவ தர்மலிங்கம் சித்தார்த்தன், ஆ.சி.கணேசவேல் (முன்னாள் உப தபாலதிபர்) உட்பட பல இளைஞர்கள் அப்போது அந்த அணியில் பங்கேற்று சிறப்பாக விளையாடினார்கள் என்பது மகிழ்வுடன் நினைவு கூர வேண்டிய விடயம்.

இதே காலத்திலேயே கந்தரோடை கிராம முன்னேற்றச்சங்கமும் உருவாக்கப்பட்டது. இச் சங்கத்திலே திருவாளர்கள் சி.மு.அப்புத்துரை, “ஆசிரியமணி” க.ஆறுமுகம், ஆசிரியர் சி.சிவசுப்பிரமணியக் குருக்கள், இ.முருகையா, ந.சி.கந்தையாபிள்ளை போன்றவர்கள் சங்கத்தின் செயற் பாட்டாளராக திகழ்ந்தார்கள். இச் சங்கத்தினர் கந்தரோடையில் கிராம முன்னேற்றச் சங்கக் கட்டிடம் அமைத்து ஒரு வாசிகசாலை அமைப்பது என்று முடிவெடுத்தார்கள். கட்டிடம் அமைப்பதற்கு இளவாலையிலிருந்த தம்பு கனகரத்தினம் என்பவரின் கிட்டத்தட்ட ஒரு பரப்புக் காணியை நீண்டகால குத்தகை அடிப்படையில் பெற்று இக் கட்டிடம் அமைக்கலாம் எனவும் தீர்மானம் எடுத்திருந்தார்கள். எமது கிராமத்தின் அதிர்ஷ்டம் அப்பொழுது இலங்கை அரசாங்கத்தின் தபால் மந்திரியாக இருந்த கௌரவ சு. நடேசனின் உதவியினால் கந்தரோடையில் உப தபாற்கந்தோர் அமைப்பதற்கு அனுமதி கிடைத்தது. அதனைத் தொடர்ந்து 1953இல் வைத்திய கலாநிதி. சி. சுப்பிரமணியமும் கௌரவ அமைச்சர் சு. நடேசனும் ஒரு சுபயோக சுபதினத்தில் இன்றிருக்கும் இக் கட்டிடத்திற்கான அத்திவாரக் கல்லை நாட்டி கட்டிடவேலையை சிறப்புற ஆரம்பித்து வைத்தார்கள். கட்டிடம் துரித கதியில் அமைக்கப்பெற்று கந்தரோடை கிராம முன்னேற்றச் சங்கம், வாசிகசாலை, மற்றும் உபதபாற் கந்தோர் ஆகிய மூன்று அமைப்புக்களும் இக்கட்டிடத்தில் சிறப்பாக இயங்க ஆரம்பித்தன. இந்த வாசிகசாலைக்கு இடப்பட்ட பெயர்தான் ஸ்ரீ சுப்பிரமணிய வாசிகசாலை இந்தக் கட்டடத்திற்கான நிதியுதவியை வழங்கிய வைத்திய கலாநிதி சி.சுப்பிரமணியம் அவர்களின் பெயரே வாசிகசாலைக்குச் சூட்டப்பட்டது. பின்னர் அது ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலையமாக வளர்ச்சி பெற்று இன்று ஸ்ரீ சுப்பிரமணிய முன்பள்ளியினையும் உள்ளடக்கி தனது சமூக பங்களிப்பை மேலும் ஒருபடி சிறப்பாக வழங்கி வருகின்றது.

இக்கட்டிடத்துக்கு மேற்குப் புறமாக அமைந்திருக்கும் காணியில் இளைஞர்கள் கரப்பந்தாட்டம், கிரிக்கட், தாச்சி, உதைப்பந்தாட்டப் போட்டிகள் என்பவற்றை நடாத்தி சனசமூக நிலைய சுற்றாடலை கிராம மக்களின் பிரதான விளையாட்டுக் கூடுமிடமாக வைத்திருந்தார்கள். இந்த வேளையில் 1969 இல் வலிகாமத்தில் நடைபெற்ற உதை பந்தாட்டப் போட்டியில் கந்தரோடை இளைஞர்கள் அணி வெற்றிக்கிண்ணத்தையும் வென்றெடுத்திருந்தார்கள் என்பது மிகவும் பெருமைக்குரியதொரு வரலாறு. வெற்றிவாகை சூடிய இக் கந்தரோடை இளைஞர்கள் அணியின் புகைப்படம் முன்னாள் உபதபாலதிபர் ஆ. சி. கணேசவேலிடமிருந்து இக்கட்டுரை எழுதும் பொழுது கிடைக்கப் பெற்றதும் மிகவும் மகிழ்ச்சியான ஒரு விடயமாகும். வரலாற்றுப் பெறுமதிமிக்க இப்புகைப்படம் உங்கள் பார்வைக்காக இவ்வறிக்கையிலும் பதிப்பிக்கப் பட்டுள்ளது. இப் புகைப்படத்தில் வெற்றி வாகை சூடிய இளைஞர்கள் குழுவின் தலைவராக முன்னாள் உபதபாலதிபர் ஆ. சி.கணேசவேலும் வெற்றியீட்டிய மற்றைய கந்தரோடை வீரர்களாக, த.சித்தார்த்தன், ந.சுபேந்திரன், சி.பேரின்ப நாயகம், க.சோதிநாதன், சி.கனகநாயகம், சி.துரைசிங்கம், பா.மகேந்திரம் ஆகியோரை இனங்காணக்கூடியதாக உள்ளது.



விளையாட்டுத் தவிர்ந்து சுகாதாரம் சம்பந்தமான விழிப்புணர்வூட்டும் படங்கள், சமூக தொடர்பாடல் படங்கள், குறும்படங்கள் என்பன சனசமூக நிலையத்தினரால் அப்போதெல்லாம் வெண்திரையில் காண்பிக்கப்பட்டன. ஊர் மக்கள் எல்லோரும் திரண்டிருந்தது பார்ப்பார்கள். இதில் நானும் ஓர் சிறுமியாக இருந்து பார்த்ததை நினைவு கூரும் போது மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். அந்தக் கால கட்டத்தில் அரசாங்கத்தினால் ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலையத்திற்கு ஒரு வானொலிப் பெட்டி வழங்கப்பட்டிருந்தது. அது மின் இணைப்புக்கள் அறவே இல்லாத காலம். குப்பி விளக்கில் படித்த காலம். வானொலிப் பெட்டி மின்கலங்கள் (battery) மூலமாகவே இயங்கியது. தினமும் மாலை நேரங்களில் சனசமூக நிலையத்தில் மக்கள் ஒன்றுகூடி உள்ளூர் மற்றும் உலகச் செய்திகளை அறிந்து கொண்டார்கள். பின்பு படிப்படியாக யாழ்ப்பாணத்திலிருந்து தினசரிப் பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கின. இதனைத் தொடர்ந்து இவ்வாசிகசாலை மேலும் சிறப்பாக மக்கள் ஒன்று கூடிக் கலந்துரையாடி அறிவு பூர்வமான தகவல்களை பரிமாறும் நிலையமாகப் பரிணமிக்கத் தொடங்கியது. அத்துடன் வெளிமாவட்டங்களில் பணிபுரிவோர் செய்திகள் பரிமாறும் இடமாக அருகிலுள்ள தபால் நிலையத்தின் தொலைபேசி உபயோகமானது. அது ஒரு பழைய சுழற்சி முறையான தொழில்பாடானது. வட்டமாக எண்கள் இருக்கும். பழைய நாளையான் என நம் மூதாதையர்கள் கூறுவார்கள். கிராமத்தில் ஒரே ஒரு தொலைபேசி இருந்தது அந்தக்காலம். ஒவ்வொருவரிடமும் இரண்டு மூன்று தொலைபேசி இருப்பது இந்தக் காலம்.

1980 களில் கந்தரோடை இளைஞர்கள் ஒன்று சேர்ந்து நிர்வாகத்தைப் பொறுப்பெடுத்து பல சமய மற்றும் சமூகப்பணிகள் (சிரமதானங்கள், பஜனைக்குழு மற்றும் நவராத்திரி விழா) என்பவற்றை புத்தெழுச்சியுடன்

நடாத்தி வந்ததும் இன்றும் பசுமையாக எம் நினைவில் உள்ளது. 1987ம் ஆண்டு காலப் பகுதியில் இந்திய ராணுவம் வருகை தந்த நேரம். இந்திய இராணுவத்தினரும் மக்களை அழைத்துக் கூட்டங்களை நடாத்துவதற்கு சனசமூக நிலைய மண்டபத்தையே பாவித்தனர். உள்நாட்டுப் போர் முரண்பாடுகளால் கல்வி பாடசாலைகள் குழப்பமடைந்த காலத்தில் நமது இளைஞர்கள் பாதுகாப்பாகவும் வேறு தீய வழிகளில் வழிதவறிப் போகாது நல்லபடியாக பொழுதினைக் களித்த இடமும் சனசமூக நிலைய வளாகமே. இளைஞர்கள் ஒன்றுகூடி பல விளையாட்டுக்களில் தம்மை ஈடுபடுத்தி தம் மன அழுத்தம் மனக்கவலை குறைத்து நட்புறவை வளர்த்திருந்தார்கள். அதே இளைஞர்களே இன்று திக்குத் திக்காக உலகெலாம் புலம்பெயர்ந்திருந்த போதும் வாசிகசாலை தந்த பழைய நட்பின் பிணைப்பில் மீண்டும் ஒன்றுகூடி இன்று நடைபெறும் இந்தப் புனரமைப்பு வேலைக்கு அடிநாதமாக நின்று பணப்பங்களிப்பையும் இடையறா ஊக்கமளிப்பையும் நல்கி வருகின்றார்கள் என்பது குறிப்பிட்டுச் சொல்லப்படவேண்டிய மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயம்.

உள்நாட்டுப் போர் உக்கிரமான காலங்களிலும் இடப்பெயர்வுகளின் பின்னரும் சனசமூக நிலையம் இயன்றவரை தொடர்ந்தும் இயங்கி வந்தது. 1995ம் ஆண்டு முழுக்கிராமுமே பெருவாரியாக இடம் பெயர்ந்து பின் மீளக்குடியமர்ந்த பின் இப்பொழுதுள்ள முன்பள்ளி இக்கட்டிடத்தின் பின்பக்கம் அமைக்கப்பட்டு இன்று வரை சிறப்பாக நடாத்தப்பட்டு வருகின்றது. இதுவும் ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும்.

காலவோட்டத்தில் சனசமூக நிலையக் கட்டிடம் அதன் 70 வயது மூப்புக் காரணமாக சுவர்களில் வெடிப்பும் கூரையில் ஒழுக்கும் சிலாகைகள் கூரை மரங்கள் கறையான் அரிப்பதுமென கொஞ்சம் கொஞ்சமாக தனது சோபையை இழக்கத் தொடங்கியது. முன்பள்ளிக் கட்டிடமும் மிகவும் பதிவான கட்டிடமாக

இருந்ததனால் பள்ளியின் உட்பகுதி எப்பொழுதும் கொஞ்சம் வெப்பம் கூடிய நிலையிலேயே காணப்பட்டது. இதனால் சுகாதாரப் பிரிவினர் வருகை தரும் நேரங்களில் முன்பள்ளிக்கு இது பொருத்தமான இடம் இல்லை என்றும் இடம் மாற்ற வேண்டும் என்று அறிவுறுத்த ஆரம்பித்தார்கள். பல தடவை முறைப்பாடுகளும் செய்திருந்தார்கள். சனசமூக நிலையக் காணியானது நீண்ட காலக் குத்தகையாக சனசமூக நிலையத்தின் பெயரில் எழுதப்பட்டிராத காரணத்தினால் பல காலமாக அரசாங்க நிதிகள் எதையுமே கட்டிட மேம்பாட்டு வேலைகளைக்குப் பெற  முடியாமல் இருந்தது. இந்நெருக்கடிகளினால் கட்டிட புனரமைப்பின் அவசிய தேவையும் உணரப்பட்டது மட்டுமல்லாமல் சனசமூக நிலையக் காணியையும் சொந்தமாக எழுதப்பட வேண்டியதன் தேவையும் உணரப்பட்டது.

எமது சிக்கலான நிலையை உணர்ந்துகொண்ட கௌரவ தர்மலிங்கம் சித்தார்த்தன் அண்ணா தன்  தனிப்பட்ட குடும்ப உறவு முறைத் தொடர்புகள் மூலமாக காணி உரிமையாளருடன் தொடர்பு கொண்டு நிர்வாகத்திற்கும் காணி உரிமையாளருக்குமான தொடர்புகளை ஏற்படுத்தித்தந்தார். இதன் பின்னர் நமது நிர்வாகக்குழுவினர் காணிச் சொந்தக்காரரிடம் சென்று காணியை ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலையத்திற்கு எழுதித் தரும்படி கோரிக்கை வைத்தார்கள். இதற்கு முதல் இருந்த நிர்வாகத்தினரும் பல முயற்சிகள் எடுத்தும் கிடைக்காதது நமக்கு கிடைக்குமா என்ற ஏக்கத்துடன் விடாமுயற்சியாக ரவிக்குமார் யோகாதேவி ஆகிய நான் பிரதேச சபை உறுப்பினராக இருந்த காலப் பகுதியில் நிர்வாகத்தினருடன் இணைந்து மீண்டும் முயற்சித்தேன். முன்பள்ளி சிறுவர்களுடைய நிலையை அவர்களிடம் தெளிவுபடுத்திக் கூறினோம்.  கௌரவ தர்மலிங்கம் சித்தார்த்தன் அண்ணாவும்  எம்மோடிணைந்து காணிச்சொந்தக்காரரிடம் கதைத்து எமது கோரிக்கையை வழிமொழிந்து ஒரு வழியாக இறைவன் சித்தம் கை கூடி

16.03.2022 இல் கட்டிடம் அமைக்கப்பட்டுள்ள காணி ஸ்ரீ சுப்பிரமணிய வாசிகசாலையின் பெயரில் நன்கொடையாக எழுதப்பட்டது. கௌரவ தர்மலிங்கம் சித்தார்த்தன் அண்ணாவின் முயற்சியினால் தான் இந்தக்காணி ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலையத்திற்கு அமரர்கள் கனகரத்தினம் மற்றும் புவனேஸ்வரியின் ஞாபகார்த்தமாக மகள் திருவாட்டி.மகேஸ்வரி கனகரத்தினம் அவர்களால் நன்கொடையாக வழுங்கப்பட்டது என்பதையும் இங்கு நன்றியோடு நினைவு கூருகின்றோம். இது எமது சனசமூக நிலைய வரலாற்றில் ஒரு முக்கியமான மைல் கல் எனலாம். திருவாட்டி.மகேஸ்வரி கனகரத்தினம் அவர்களுக்கு இக் கிராம மக்கள் சார்பாக எமது மனமார்ந்த நன்றிகள்.

இவ்வேளையிலே முன்பள்ளி மாணவர்களைப் பார்வையிடுவதற்காக வெளியூரிலிருந்து வருபவர்கள், பெரியோர்கள், இளைஞர்கள், கந்தரோடை ஒன்றியம் நோர்வே செயற்பாட்டாளர்கள் அனைவருடனும் நாம் தொடர்ந்தும் தொடர்புகளை பேணி வந்திருந்தோம். குறிப்பாக எமது முன்பள்ளியை மீண்டும் ஆரம்பித்து இந்நிலைக்கு வளர்த்தெடுப்பதற்கு ஆரம்ப ஆதரவாளர்களாக கந்தரோடை ஒன்றியம் நோர்வே தொடர்ந்தும் கைகொடுத்த வண்ணம் இருக்கின்றார்கள். இதில் தனி நபராகவும் ஒன்றியமாகவும் பலர் நமக்கு உதவிகள் புரிகின்றார்கள். முன்பள்ளி மாணவர்களுக்கு அத்தியாவசியமான மலசல கூடத்தினை நாம் கேட்டுக்கொண்ட போது மறுப்பேதுமின்றி மனம் உவந்து குறுகிய காலத்தில் ஐந்து இலட்சம் ரூபா செலவில் அமைத்துக் கொடுத்திருந்தார்கள். நிர்வாகம் சார்ந்த நன்றிகள் என்றென்றும் அவர்களுக்கு உரித்தாகட்டும்.

இறுதியாக எங்களுடைய கட்டிடப்புனரமைப்பினை மேற்கொள் வதற்கான தேவையினை எங்கள் சனசமூக நிலையத்தை பார்வையிட வந்த

ஒரு சில இளைஞர்களிடம் கேட்டிருந்தோம். அவர்களும் எந்தவித மறுப்புமின்றி முயற்சி செய்வோம் என்று நமக்கு நம்பிக்கை அளித்திருந்தார்கள். இன்று நாம் எதிர்பார்த்திருக்கவே முடியாத அளவிற்கு கட்டிடத்தை புனரமைத்து புதிய கட்டிடமாக்கி நமக்குத் தந்திருக்கின்றார்கள். குறிப்பிட்ட ஒரு சில இளைஞர்கள் தங்களுடன் படித்த உறவுகளிடமிருந்து அதாவது எமது சனசமூக நிலையத்திற்கே தொடர்புகள் இல்லாதவர்களிடமிருந்து கூட தமது நட்பின் உறவின் பலத்தினாலும் சனசமூக நிலையத்தின் மீதிருந்த பற்றின் நிமிர்த்தமும் எல்லோருடைய பங்களிப்பையும் பெற்று இந்த அளப்பெரிய சேவையை நமக்கு ஆற்றி சனசமூக மற்றும் முன்பள்ளி வளர்ச்சிக்கான அளப்பரிய சேவையைச் செய்துள்ளார்கள். இனிவரும் காலங்களிலும் தொடர்ந்தும் இவர்கள் எல்லோருடைய ஆதரவையும் ஊக்கத்தையும் எதிர்பார்க்கின்றோம்.

இந்த நேரத்தில் எனது தாழ்மையான கோரிக்கை என்னவெனில் நமது கிராம மக்கள் அனைவரும் நிர்வாகத்துடன் மேலும் ஒன்றிணைந்து இந்த சனசமூகத்தினுடாக நமது கிராமத்தின் வளர்ச்சிக்காக உழைக்க வேண்டும். சனசமூக நிலையம் என்பது மக்கள் அனைவரும் கூட்டாக பங்களித்து சமூக மேம்பாட்டுக்காக செயல்படும் ஒரு நிறுவனம் என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன். தலைவர், செயலாளர், பொருளாளருடன் மட்டும் சனசமூக நிலைய வளர்ச்சி ஏற்படுவது சாத்தியம் இல்லை. பார்வையாளராக இல்லாமல் எல்லோரும் பங்காளிகளாக இணைந்து செயற்பட்டு எங்கள் கிராமத்தை வளர்த்தெடுப்போம்.

ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலையத்தின் ஊடாக எங்கள் கிராமத்தை வளர்த்தெடுப்பது எங்கள் எல்லோரது தலையாய கடமையாகும். இன்றைய

கால கட்டத்தில் எங்களது ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலையத்திற்கும், முன்பள்ளி வளர்ச்சிக்கும், கிராமத்தின் அபிவிருத்தியிலும் பங்காற்றி வருகின்ற கந்தரோடை ஒன்றியம் நோர்வேயின் பணிகள் மகத்தானவை. மேலும் இக்கட்டிடபுனரமைப்பினை முன்னெடுப்பதற்கு முன்னின்று உழைத்தவர் களான பரமானந்தன் பிரதீபன் (ஐக்கிய அமெரிக்கா), நடராஜா சூரியகுமார் (ஐக்கிய இராச்சியம்), வைத்திய கலாநிதி புவனேந்திரநாதன் ஆதவன், கந்தரோடை ஒன்றியம் நோர்வே செயற்பாட்டாளர்கள், உள்ளூர் மற்றும் புலம்பெயர் கந்தரோடை மக்கள், நண்பர்கள் என எல்லோரும் இணைந்து எமது கட்டிட புனரமைப்புக்கான நிதிப்பங்களிப்பினை மனப்பூர்வமாக வாரி வழங்கியருந்தார்கள். இக்கட்டிட வேலைகள் செவ்வனே நிறைவடைந் தமைக்காக எங்கள் நிர்வாகத்தினர் சார்பாகவும் கந்தரோடை வாழ் மக்கள் சார்பாகவும் எல்லா விதமான உதவிகளையும் வழங்கிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

கணக்கறிக்கை மற்றும் நாடு வாரியான நிதிப்பங்களிப்பாளர் விபரம் திறப்பு விழாவின் சிறப்புமலரின் பின்பகுதியில் இணைக்கப்பட்டுள்ளது.

எமது கிராம வளர்ச்சி சமூக வளர்ச்சி பற்றி எழுதும் இந்த நேரத்திலே நமது கிராமத்திலே கந்தை உபாத்தியார் வீதியில் அண்மையில் (2018) அமைக்கப்பட்ட கந்தரோடை நலன்புரி நிலையத்தைப் பற்றியும் சிலவார்த் தைகள் கூறாமல் கடந்து போகமுடியாது. கந்தரோடை நலன்புரி நிலையமானது எங்கள் கிராமத்தின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கும் தன்னலமற்ற தொண்டுக்கும் ஓர் மிகச்சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகின்றது. இதன் நிறுவுனர்கள், எங்கள் கிராம மக்கள் அயல் கிராமத்தில் வசிப்போர் அனைவருக்கும் இலவச மருத்துவ சேவைகளை வழங்குவது மட்டுமல்லாது சில அரசுசார்பான அமைப்புக்களின் உத்தியோகத்தர்கள் கடமைபுரியும் இடமாகவும் இந்த

நிலையத்தை செவ்வனே வழிநடத்தி ஒரே இடத்திலேயே பலதரப்பட்ட மக்களின் பலவகையான தேவைகளை நிறைவேற்றக் கூடிய வாய்ப்பினை வழங்கி வருகின்றார்கள். இந்நிலைய நிறுவுனர்களின்/ அமைப்பாளர்களின் பரந்த சிந்தனையையும் தன்னலமற்ற சேவையையும் நாம் வரவேற்பதோடு நன்றியினையும் தெரிவிக்கின்றோம்.

காலத்தி னால் செய்த நன்றி சிறிதுஎனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

நன்றி.

திருமதி. யோகாதேவி ரவிக்குமார்
ஆலோசகர் ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலையம்
இணைப்பாளர் ஸ்ரீ சுப்பிரமணிய முன்பள்ளி
முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்

குறிப்பு: ஆரம்ப கால சனசமூக நிலைய வரலாற்றுத் தகவல்கள் எமது கிராமத்தின் மூத்தவர்களில் ஒருவரான முன்னாள் உபதபாலதிபர் ஆ.சி. கணேசவேல் அண்ணன் அவர்களிடம் கலந்துரையாடிப் பெறப்பட்டது.

## கந்தரோடை ஸ்ரீ சுப்பிரமணிய முன்பள்ளி வரலாறும் வளர்ச்சியும்

கந்தரோடையில் முன்பள்ளிகளின் அறிமுகம் அதிகமாக இல்லாத காலகட்டத்திலே 1980ம் ஆண்டில் மகேந்திரன் லிங்கேஸ்வரி தம்பதிகள் "கண்ணன் முன்பள்ளி" என்றொரு முன்பள்ளியினை கந்தரோடையில் ஆரம்பித்து சிறப்புற நடாத்தி வந்தார்கள். இவர்களின் வீட்டின் ஒரு பகுதியில் நடாத்தப்பட்ட "கண்ணன்" முன்பள்ளியில் சுமார் 30 மாணவர்கள் கல்விகற்று வந்தனர். "கண்ணன்" முன்பள்ளியின் சிறப்பான கற்றல் செயற்பாடுகளால் மாணவர் தொகை படிப்படியாக அதிகரித்து ஒரு கட்டத்தில் 40க்கு மேலான சிறுவர்கள் கற்றலை மேற் கொண்டிருந்தனர். இவ்வாறாக "கண்ணன்" முன்பள்ளி பெரு வளர்ச்சி அடைந்து கொண்டு வரும் நேரத்தில் அனைத்து முன்பள்ளிகளும் பதிவு செய்யப்பட்டு பொதுக் கட்டிடங்களிலேயே நடாத்தப் படவேண்டுமென நாடு முழுவதும் ஓர் அரச உத்தரவொன்று பிறப்பிக்கப்பட்டது. இந்த அரச உத்தரவினால் "கண்ணன்" முன்பள்ளியானது கந்தரோடை ஸ்ரீ சுப்பிரமணியக் கட்டிடத்தின் ஒரு பகுதிக்கு இடம்மாற்றப்பட வேண்டிய கட்டாய தேவையேற்பட்டது. 2010 இல் இடம் மாற்றப்பட்ட முன்பள்ளி "ஸ்ரீ சுப்பிரமணிய" முன்பள்ளியாக பெயர் மாற்றம் பெற்று அரச உத்தரவுக்கமைய பதிவுசெய்யப்பட்டது. இன்று "ஸ்ரீ சுப்பிரமணிய" முன்பள்ளியாக வளர்ந்து நிற்கும் இம் முன்பள்ளியின் சிறப்பான வளர்ச்சிக்கான அத்திவாரம் இதனை ஆரம்பித்து வைத்தவர்களான மகேந்திரன் லிங்கேஸ்வரி தம்பதிகளையும் அங்கு பணிபுரிந்த ஆசிரியர்கள் திருமதி ம.லிங்கேஸ்வரி, திருமதி அ.இராஜேஸ்வரி, திருமதி ர.வளர்மதி மற்றும் காலத்திற்கு காலம் தற்காலிக பணிபுரிந்த மேலும் பல முன்பள்ளி ஆசிரியர்களையே சாரும்.

2020 இல் ஆசிரியைகள் திருமதி ம.லிங்கேஸ்வரி மற்றும்

அ.இராஜேஸ்வரி இருவரும் பணி ஓய்வு பெற்றனர். இவர்களின் பணி ஓய்வை அடுத்து புதிய ஆசிரியர்களை உள்வாங்கி ஸ்ரீ சுப்பிரமணிய முன்பள்ளியை மீளக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை ஏற்பட்டது. இதற்கான அதீத முயற்சியினை ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலைய அப்போதைய நிர்வாகத் தலைவர் இ.சுத்தானந்தன், செயலாளர் அ.வியாசன், பொருளாளர் ச.லாவண்யா, 9ம் வட்டார பிரதேச சபை உறுப்பினராகச் சேவையாற்றிய திருமதி யோகாதேவி ரவிக்குமார் மற்றும் விவசாய சம்மேளனத் தலைவர் க.அரசிளங்குமாரன் ஆகியோர் முன்னெடுத்திருந்தனர். பலகால அனுபவம் பெற்ற ஆசிரியர்களின் பணி ஓய்வுகளால் சிறிது தற்காலிக பின்னடைவைச் சந்தித்த முன்பள்ளி, ஆசிரியர்களான திருமதி ர.வளர்மதி, திருமதி ஜெ.ரோகினி இணைவின் பின் மீண்டும் புத்துயிர் பெற்றது. முன்பள்ளி முயற்சிகள் தடையுறாமல் இருப்பதற்கு அயராது உழைத்த ஆசிரியர்களான திருமதி ர.வளர்மதி, திருமதி ஜெ.ரோகினி இருவர்களுக்கும் நிர்வாகம் தனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது. இவர்களின் இடைவிடாத ஆக்கம் ஊக்கத்துடன் திருமதி யோகாதேவி ரவிக்குமார் அம்மையார் அவர்களின் உதவியுடனும் முன்பள்ளி தற்பொழுது சிறப்பான முறையில் நடாத்தப்பட்டு வருகின்றது.

ஆரம்பத்தில் ஆசிரியைகள் திருமதி ர.வளர்மதி மற்றும் திருமதி ஜெ.ரோகினி ஆகிய இரண்டு ஆசிரியர்களுடனும் 10 மாணவர்களுடனும் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட முன்பள்ளி இன்று 24 பிள்ளைகளுக்கு ஆரம்பக் கல்வியறிவூட்டிச் சிறப்பாக இயங்கி வருகிறது. இங்கு சமய நிகழ்வுகள், விளையாட்டுப் போட்டிகள், கலைவிழாக்கள், மாணவர் சந்தைகள், கண்காட்சிகள் என பலதரப்பட்ட நிகழ்வுகளோடு முன்பள்ளி பாடவிதானத் திற்கேற்ப சிறார்களுக்கு ஆரம்பக் கல்வியறிவூட்டப்படுகிறது. இவர்களின் அர்ப்பணிப்பாலும் விடாமுயற்சியாலும் எமது முன்பள்ளி இன்று மீண்டும் துரித வளர்ச்சி நிலையை எட்டியிருப்பது மிகவும் மகிழ்ச்சியான ஒரு விடயம்.

புத்துணர்வோடு மீளவும் முன்பள்ளி புதுவிடத்தில் சிறப்பாக செயற்பட கந்தரோடை ஒன்றியம் நோர்வேயின் பங்களிப்பும் அபரிமிதமானது. கந்தரோடை ஒன்றியம் நோர்வே இலவசமாகச் சீருடைகளையும் பாடசாலைப் பொருட்களையும் தொடர்ந்தும் வழங்கிக் கொண்டுவருகின்றார்கள். நோர்வே ஒன்றியமே 2022 இல் முன்பள்ளிக்கான மலசலகூடத்தையும் அமைத்துத் தந்தார்கள் என்பதையும்இங்கே குறிப்பிட்டுச் சொல்லவேண்டும். முன்பள்ளி நடத்த இது மிகவும் அத்தியாவசியமான தேவையானபடியினால் இதை கந்தரோடை ஒன்றியம் நோர்வே மிகவும் குறுகிய காலத்தில் அதி விரைவாக அமைத்து எங்கள் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தமைக்காக இவ்விடத்தில் எமது மனமார்ந்த நன்றிகளை பெற்றோர் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகம் சார்பாகத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முன்பள்ளி ஆசிரியர் கொடுப்பனவுகளுக்கு கந்தரோடையை பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வதிவிடமாகவும் கொண்ட வை.பாலசுப்பிர மணியம், கந்தரோடையை பிறப்பிடமாகவும் இலண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட வீ. மோகனகாந்தன் மற்றும் கந்தரோடையை பிறப்பிடமாகவும் இலண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கி. நிறஞ்சன் ஆகியோர் பொறுப்பெடுத்துள்ளனர். இவர்களுடன் தரம் - 01 செல்லும் மாணவர்களை கௌரவிப்பிற்கான பரிசினை திருமதி சிவமணி பாலசுப்பிரமணியம் ஞாபகார்த்தமாக பாலசுப்பிரமணியம் குடும்பத்தினர் வழங்கி வருகின்றனர். இவை தவிர்ந்து, விளையாட்டுப் போட்டிகள் கலை நிகழ்வுகள் மற்றும் பல நிர்வாகத் தேவைகளுக்கு தொடர்ச்சியாக உதவும் அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது இரு கரம் கூப்பிய நன்றிகளையும் இத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இம் முன்பள்ளியின் தோற்றத்தையும் வளர்ச்சியினையும் திரும்பிப் பார்க்கும் பொழுது கந்தரோடையில் ஆரம்பக் கல்வியைக் கற்ற பல மாணவர்கள் இன்று வைத்திய நிபுணர்களாக பொறியியலார்களாக வங்கி முகாமையாளர்களாக ஆசிரியர்களாக தொழில் அதிபர்களாக தொழில்நுட்பவிய லாளர்ளாக வாழ்வில் உயர்ச்சி பெற்று தமது குடும்பத்துக்கும் கிராமத்துக்கும் பெருமை சேர்த்து வருகிறார்கள்.

தற்போதைய முன்பள்ளி ஆசிரியர்களான திருமதி ர.வளர்மதி, திருமதி ஜெ.ரோகினி இருவரும் முறையான முன்பள்ளி பாடவிதான தொழில்முறைப் பயிற்சிகள் சான்றிதழ்கள் பெற்று மிகவும் சிறப்பான முறையில் அன்பாகவும் ஆதரவாகவும் தங்களது ஆசிரியர் சேவையை ஆற்றி வருகின்றார்கள். இவர்களின் சிறப்பான சேவையோடு எங்கள் முன்பள்ளி மேன்மேலும் சிறப்பாக வளர்வதற்கும் எம் சிறார்களுக்கு கல்வியறிவூட்டவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதுடன் அனைத்து நலன் விரும்பிகளின் தொடர்ச்சியான ஆதரவையும் வேண்டி நிற்கின்றோம்.

பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப்
பாரை உயர்த்திடுவோம்!

நன்றி

நிர்வாகத்தினர்

**கீழ்வருங்குறிப்புக்கள் கந்தரோடை மைந்தன் யாழ்ப்பாணம் சித்த மருத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளர் Dr.சே.சிவசண்முகராஜா M.D.(S) இன் "காலத்தை வென்று நிற்கும் கந்தரோடை" புத்தகத்திலிருந்து பெறப்பட்டவை**

## கந்தரோடையில் மகாத்மா காந்தி

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியானது மகான்களையும், பெரியோர்களையும் அழைத்து கௌரவித்ததன் மூலம் தனக்குப் பெருமையைத் தேடிக்கொண்டதுடன், கந்தரோடைக்கும் பெருமையைத் தேடிக்கொடுத்தது. அந்த வகையில் இந்திய சுதந்திரத்தின் தந்தை, அண்ணல் காந்தி மகானின் ஸ்கந்தா விஜயம் ஸ்கந்தா வரலாற்றிலும், கந்தரோடை வரலாற்றிலும் பொன்னெழுத்துக் களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இந்தியாவில் ஏழை மக்களின் நல்வாழ்வின் பொருட்டு மகாத்மாகாந்தி அவர்கள் ஆரம்பித்திருந்த கதர் இயக்கத்திற்கு ஸ்கந்தா நிறுவனர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட காணிக்கையை ஸ்கந்தா கல்லூரி நிர்வாகம் நேரடியாகவே காந்தி மகானிடம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

மகாத்மா காந்தியடிகள் 27.11.1927 ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு விஜயம் செய்து இக் கல்லூரியில் நிகழ்த்திய சொற்பொழிவைச் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்களின் மகன் அம்பலவாணபிள்ளை அவர்கள் தமிழாக்கம் செய்து ஸ்கந்தா மலரில் (1969) வெளியிட்டபடி இங்கு தரப்பட்டுள்ளது.

**தலைமை ஆசிரியர் அவர்களே!**

**மாணவர்களே!**

இன்று உங்கள் வித்தியாசாலைக்கு நான் சமூகஞ் செய்யுஞ் சந்தர்ப்பங் கிடைத்தமை பற்றி மிக மகிழ்ச்சியடைகின்றேன். மாணவர்களைச் சந்திப்பதென்றால் எப்போதும் எனக்கு அளவு கடந்த சந்தோஷம். கபடமற்ற இளைஞராகும் உங்களுடைய உள்ளங்களில் நல்வார்த்தைகள் நன்கு பதியுந் தன்மையன. உங்கள் தலைமையாசிரியரும், உதவியாசிரியர்களும் இங்கே என் பக்கத்தில் நிற்கின்றார்கள். அவர்களுடன் உங்கள் வித்தியாசாலையின் தாபகரும் கூட நிற்கின்றார். இக் கல்விக் கழகம் உண்மையான கல்வியை உங்கட்கு அளிக்குமாயின் அதுவே பெரிய பேறாகும். கல்வி கற்பதோடு நில்லாது கற்றபடி ஒழுகவும் பழகிக்கொள்ள வேண்டும். மாணவரென்போர் தந்தை, தாயார், ஆசிரியர் என்போர்க்குக் கீழ்ப்படிந்து அவர்கள் நல்வார்த்தைகளைத் வேதவாக்காகக் கொண்டு நடக்க வேண்டும்.

இளம்பருவத்தில் நாம் கற்றுப் பழகுவன ஒரு போதும் நம்மை விட்டு நீங்கா. தாய் தந்தையர், ஆசிரியர் நமக்களிக்கும் புத்திமதிகள், கட்டளைகள் சிறுவயதினராக இருக்கும் போது சில போது கசப்பாக இருக்கும். அவைகளை ஏற்காமலும் விடலாம். ஆனால் வாழ்க்கையில் மிக்க அனுபவம் படைத்த அவர்களுடைய வாக்குகள், உபதேசங்கள் எவ்வளவு உண்மையானவை என்பது வயது முதிர்ந்த பின் தான் தெரிய வரும். எல்லாவற்றிற்கும் முதலாவதாக நீங்கள் கடவுள் பக்தியுடையவர்களாக வாழ முயல வேண்டும். அப்போது தான் உங்கள் மாட்டு நல்லொழுக்கம் பெரிய ஆபரணமாகக் கிடைக்கும். சத்தியத்தை ஓம்பிக் கடைப்பிடிக்க வல்லவராக வேண்டும். சத்தியத்தை மேற்கொள்பவர்களை எவ்வித தீங்குகளும், தீமைகளும்

வந்தணுக மாட்டா.

கல்வி கற்பதோடு நில்லாது சமுதாயத்தின் முன்னேற்றத்தை நாடித் தொண்டுகள் செய்யவும் இளம் பருவத்திலேயே பழகிக் கொள்ள வேண்டும்.

இப்போது நான் இலங்கைக்கு வந்தது கதர் இயக்கத்துக்குப் பணம் சேர்ப்பதற்காகவே. இந்தியாவில் கோடிக் கணக்கான ஏழை மக்கள் நேரத்துக்கு உண்ணப் போதிய உணவின்றியும், உடுக்கத் துணியின்றியும் வருந்து கிறார்கள் என்பதை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. அவர்களுடைய வறுமையை ஒழிப்பதற்கே இந்தக் கதர் இயக்கத்தை நாம் ஆரம்பித்துள்ளோம். பஞ்சிலிருந்து நூல் நூற்றுக் கதர்ப் புடவைகள் நெசவு செய்வதால் அவ்வேழை மக்களின் பொருளாதாரம் உயர்வடையுமென்பது எனது பூரணமான நம்பிக்கை. நீங்கள் இன்று அளிக்குங் காணிக்கை இப்புனிதமான தொண்டுக்கே செலவு செய்யப்படும். எல்லா மக்களும் கையினால் நெசவு செய்யப்பட்ட கதராடைகளையே அணிவதென்று உறுதி செய்து கொள்வாராயின், இப்பொருளாதார இயக்கம் நாட்டிற்கும் மக்கட்கும் பெரு நன்மையை வருவிக்குமென்பதில் ஐயமில்லை.

மாணவர்களாகிய நீங்கள் இந்தப் பெரிய தொண்டுக்குப் பணவுதவி செய்ததுடன் திருப்தியடையாது கதர்ப் புடவைகளையே உபயோகிக்க உடன்பட வேண்டும். அப் போது தான் கதர் இயக்கம் வளர்ச்சியடைந்து ஏழை மக்களின் வாழ்வு சிறக்கும். நீங்கள் மாத்திரமல்ல உங்கள் வீடுகளில் வசிக்கும் பெண்மணிகளும் கருணையுடன் கதராடைகளை உபபோகிக்க முன்வர வேண்டும்.

மேலும் நான் கூறுவது என்னவென்றால் நல்லொழுக்கமும், கடவுள் பக்தியும், கீழ்ப்படிவுமே உங்களை மேல் நிலைக்குக் கொண்டுவரவல்லன. உயரிய நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இவ் வித்தியாசாலை வளர்ச்சி அடைந்து, நாளடைவில் நாட்டுக்குப் பெரு நன்மையைப் பயக்க வேண்டுமென்று நான் கடவுளைப் பிரார்த்திக்கின்றேன்.

நீங்கள் மனமுவந்து இந்தியாவிலுள்ள ஏழை மக்களின் பொருட்டு அன்புடன் அளித்த காணிக்கைக்கு மறுபடியும் எனது தாழ்மையான நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

## கந்தரோடையிலுள்ள குறிச்சிகள்

கந்தரோடையிலுள்ள குறிச்சிகளின் பெயர்களைச் சில அறிஞர்கள் சிலேடைப் பொருள் வைத்துப் பாடியுள்ளனர். அங்ஙனம் பாடியவர்களில் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையில் ஆசிரியராகப் பணிபுரிந்த வித்துவான் இ.திருநாவுக்கரசு அவர்கள் குறிப்பிடத்தக்கவராவார். (தமிழ்க் கந்தம் 1959) அவரியற்றிய அருளானந்தப் பிள்ளையார் பிள்ளைத்தமிழில் வருகைப்பருவத்துக்குரியதாக அமைந்த பாடல் வருமாறு.

வற்றாக்கை யர்வாழ் மடத்தடி விளாங்கனி
 வளரிக்கி ரானை யுண்ண
வளர்சங்கா வத்தை செல் திசை மாற்ற
 உச்சாப் பனைமருங் கோடி மலிநீர்
முற்றா இயங்கம் புலந்தாண்டி மெய்ந்நூல்
 முழுதுணர் கணக்கர் வளவின்
முடுகுநீர் வருட உறு தோப்பாம் பள்ளம் சேர்ந்து
 மொழிபாடல் பிழை கண்டதும்
கற்றார்தம் அவையிலே கையிற் குடாரையால்
 கழுத்தற்று மறுக வெட்டும்
கவி ஒட்டன் கட்டுவளர் இனியா இலந்தைக்
 கனிவேண்டி மைந்தர் மகளிர்
முற்றாரும் செந்நெல் நிறையும் கந்தரோடை நகர்
 முன் பொருக்கன் புலமுறும்
முற்றிய பருத்தியோலைக் கின்னருளானந்த
 மும்மதக் கரி வருகவே.

இதன் பொருள் : நோன்பினால் வற்றிய உடலையுடைய அந்தணர் வாழும் கொடை மடம்படுதலின் வற்றாத கையுடைய வள்ளல்கள் எனச் சொல்லும் மக்கள் வாழும் மடத்தடியில், நீண்ட விளாங்கனியை விளாவையும் வேங்கை மரத்தையும், கரும்பின் காட்டையும் யானை முறித்துண்ண, அஞ்சிய சங்கு குறுக்கே பாய்தலின், பெரிய குளத்தில் ஓடி வரும் வத்தையின் செல்லுந்திசையை மாற்ற, அவ்வத்தை உயர்ந்த பனையோரம் சென்று, நீர் முடுக்கும் இயக்கம்புலம் கடந்து, கற்றுணர் கணக்காயர் வாழும் கணக்கர் வளவு தாண்டி, தோப்பாம் பள்ளம் புகுந்து, இரண்டொன்றாய் முடிந்து தலை இறங்கப் போட்டு, கோடரியால் வெட்டும் ஒட்டக் கூத்தன் கட்டு நீர் வயல் மருங்கோடி, இன்பம் வேண்டிய மைந்தரும், மகளிரும் இருக்கின்ற இலந்தைக் கனிக்காக வந்து சூழும் வளம் படைத்ததும் பருத்திவேலையை உடையதும், கந்தரோடையில் உயர்ந்ததுமுமாகிய பொருக்கன் புலத்திற் சென்று தங்கும் வளம் மிக்க நகரில் உறையும் அருளானந்த விநாயகப் பெருமானே வருக. என்பதாம்.

**இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள குறிச்சிகளின் பெயர்களாவன**

| | | |
|---|---|---|
| 01. வற்றாக்கை | 02.மடத்தடி | 03.விளாங்கணை |
| 04.இக்கிரானை | 05.சங்கவத்தை | 06.உச்சாப்பனை |
| 07.இயங்கம்புலம் | 08.கணக்கர் வளவு | 09.தோப்பாம் பள்ளம் |
| 10.குடாரை | 11.ஒட்டன் கட்டு | 12.இனியா இலந்தை |
| 13.கந்தரோடை | 14.பொருக்கன் புலம் | 15.பருத்தியோலை |

வேறொரு அன்பர் கந்தையா உபாத்தியாயரின் பெருமையை எடுத்துக்கூற முற்பட்டவிடத்து கந்தரோடையின் சிறப்பையும், அதிலுள்ள குறிச்சிகளின் பெயர்களையும் பின்வருமாறு பாடியுள்ளார்.
(தமிழ்க் கந்தம் 1959)

சங்கம் பெருக்கமாய் இயக்கம் புலாக் குடாரையால்
சகத்தினில் மடந்தை அடிசாய வீழ்த்த வென்றே
பங்கம் மிகுந்த உச்சாப் பனைகள் பருத்தி
யோலையயோ டினியா இலந்தை வளர் கந்தரோடை
தங்கம் பொருவும் வட்டாக்கைத் தடத்திடமான
தண்கயற் கண்ணி இக்கிரா ஆனை விளாங்கனியாய்
எங்கள் தம்மளைக் கணக்காரர் வளரும் பவத் தோப்பாம்
பள்ளம் ஒட்டான் கட்ட உகந்தனள் கந்தனையே.

இதன் பொருள் யாதெனில் அபாயம் நிறைந்த, உயர்ந்த பனைகள் ஓலைகள் மிகுந்து, இனிக்கும் இலந்தைகளோடு வளரும் கந்தரோடையில் பொன்னை ஒக்கும் வட்டாக்கை என்னும் இடத்தில் வீற்றிருக்கும் காயல் போலும் குளிர்ந்த கண்களையுடைய, எம்மையாளும் அம்மை, சங்கங்கள் அதிகரிப்பதனால் உண்டாகும் அறிவாம் கோடாரியால் அறியாமையை வேருடன் வீழ்த்தவும் ஆனை என்னும் நோயாற் பீடிக்கப்பட்ட இனிமை ஒட்டா விளாங்கனி போல எங்களைக் கணக்கில்லாத பாவங்கள் வளரும் தோப்பாகிய பள்ளத்திற் சேரவிடாது, தன்னோடு சேர்ப்பதற்குக் கந்தையா என்னும் வள்ளலை உகந்தனள்.

**இப்பாடலில் சுட்டப்படும் கந்தரோடைக் குறிச்சிகளாவன:**

| | | |
|---|---|---|
| 01.இயங்கம் புலம் | 02.சங்கம்புலம் | 03.பெருக்கம் புலம் |
| 04.குடாரை | 05.உச்சாப்பனை | 06.பருத்தியோலை |
| 07.இனியா இலந்தை | 08.வட்டாக்கை | 09.கயற்கண்ணி |
| 10. இக்கிரானை | 11.விளாங்கனை | 12.தம்மளை |
| 13. கணக்கர் வளவு | 14.தோப்பாம் பள்ளம் | 15.ஒட்டன்கட்டு |

இவ்விரு பாடல்களிலும் 15 குறிச்சிப் பெயர்கள் கூறப்பட்டுள்ள போதிலும் முதலாவது பாடலிற் கூறப்பட்டுள்ள மடத்தடி, சங்கவத்தை என்பவற்றுக்குப் பதிலாக கயற் கண்ணி, தம்மளை ஆகிய குறிச்சிப் பெயர்கள் இடம் பெற்றிருத்தல் கவனிக்கத்தக்கது.

